இதைப்பற்றிச் சொல்வது? மீண்டும் அந்த முறையை அவர்கள் தொடர்ந்து பின்பற்றுவதாக இருந்தால் தலைவரை வெளியே போகச் சொல்லிவிட்டு அவர்களே நடத்தலாம். மீண்டும் அப்படிச் செய்வது நல்ல தல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உட்கார்ந்துகொண்டே பேசினால் அது சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலே ஏறாது என்று நினைத்துக்கொண்டு அவர்கள் அடிக்கடி உட்கார்ந்துகொண்டே பேசுகிறார்கள். எனக்கும் அனுபவம்,—திரு விநாயகம் 1942-லே இருந்து இந்த சட்டசபையிலே இருக்கிறார், நானும் இருக்கிறேன்—அந்த மன்றத்திலே உண்டு. நானும் அவரைமாதிரி கீழே உட்கார்ந்துகொண்டே சொல்வதானால் அதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன். அந்த நிலையை திருத்திக்கொண்டுவிட்டால் நலமாக இருக்கும்.

திரு. என். கிட்டப்பா : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உட்காருங்கள். நந்தனத்திலே அந்த நிலைமை ஏற்பட்டது உண்மைதான். அதிகாரிகளைத் தாக்கியதாலே காலதாமதம் இருக்கிறது என்று சொல்லமுடியாது. எப்படியாவது கார்டு ஊ வாங்கவேண்டும் என்றுதான் அப்படிச் செய்திருக்கிறார்கள். நிச்சயமாக காலதாமதம் ஏற்படவில்லை. அந்த அலுவலகத்திலே உள்ளவர்கள் இதற்காக இரவு பகலாக வேலை செய்திருக்கிறார்கள். இரவு நேரத்திலேகூட நாங்கள் வேலைக்குப் போய்விடுகிறோம், தகவல் கொடுப்பதற்கு ஆள் இல்லை என்று சொன்னால். அப்படிப்பட்ட இடங்களி லும் அவர்கள் போய் பார்க்கிறார்கள். துரிதமாக நடவடிக்கை எடுக்கிறார்கள். போலிப் பேர்வழிகள் அங்குதான் கேட்போம் கொடுக்கவேண்டுமென்று சொல்வதால் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமை களை எல்லாம் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் யோசிக்கவேண்டும். எனவே காலதாமதம் அதிலே ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Report on double crop cultivation.

* 360 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether the Member, Board of Revenue appointed to examine and report on the possibility of cultivating two crops where only one crop was possible has submitted his report to the Government; and

(b) if so, the results thereof ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) ஆம்.

(இ) இந்த அறிக்கையில் கண்டுள்ள ஆலோசனைகளின் அடிப்படை யில், இயன்ற இடங்களிலெல்லாம் ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. காலங்காலமாக ஒரு போக நிலங்களாக இருந்து வந்த 2,20,832 ஏக்கர் நிலங்கள் 1967–68-ல் இருபோக நிலங்களாக மாற்றப்பட்டன. இதனால் நெல் உற்பத்தி 2,25,428 டன் கூடுதலாகியது.

திரு. கே. விநாயகம் : சார், இந்த இருபோகங்களாக உற்பத்தி செய்யப்பட்டதாலே அதிக உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப் படும்பொழுது எந்த எந்த மாவட்டங்களிலே அந்த முறை கையாளப் பட்டது? இந்த குறிப்பிட்ட முறையை செங்கற்பட்டு மாவட்டத்திலும்

1969 மார்ச் 17]

அமலுக்குக்கொண்டுவருவதற்கு குறிப்பு இருக்கிறது என்று ரெவின்யூ போர்டு மெம்பர் சொல்லியிருக்கிருரா ? இல்லை என்ருலுங்கூட இதை அமல்படுத்துவதற்கு என்ன என்ன சூழ்நிலைகள் வேண்டும் செங்கற்பட்டு மாவட்டத்திலே ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த இருபோகச் சாகுபடியானது தஞ்சாவூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, மதுரை, தர்மபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது. செங்கற்பட்டிலே போதுமான தண்ணீர் வசதி இருக்குமாளுல் அதுபற்றி யோசிக்கலாம். இப்பொழுது அங்கு இருக்கிற வசதியெல்லாம் மின் இணைப்பைக் கொண்டும், கிணற்றுப் பாசனம் மூலமாகவும்தான் அங்கே அதிகச் சாகுபடி செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்த ரேஷன் திட்டத்தையொட்டி கோவையிலே. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரேஷன் பற்றிய கேள்வியல்ல இது.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தயவுசெய்து மன்னிக்கவேண்டும். நான் முந்தின கேள்விக்குக் கை தூக்கினேன். தாங்கள் கூப்பிட்டு விட்டீர்கள். நான் பேசிக்கொண்டிருந்ததால் கவனிக்கவில்லை. தயவுசெய்து மன்னிக்கவேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம் : ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாகக் கொண்டுவருவதற்கு நியமிக்கப்பட்ட வருவாயத் துறை அதிகாரி மொத்தம் தமிழ்நாட்டில் எந்த எந்த மாவட்டங்களில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாவட்டங்களைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிருர்களே.

திரு. எஸ். ஆறுமுகம் : எத்தனை ஏக்கர் விளைவிக்கலாம் என்று அறிக்கை கொடுத்திருக்கிருர்கள்? 20 கோடி ரூபாய் அளவிலே ஒரு விவசாயத் திட்டத்தைத் தயார் செய்து மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பியதா ? அதற்காக மத்திய அரசு என்ன பதில் சொல்லியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ராயப்பா அவர்கள் கொடுத்த திட்டத்தின் அடிப்படையிலே தொகை கேட்கிருேம். இன்னும் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருேம். ராஜ்ய உணவு அமைச்சர், திரு அண்ணு சாகிப் சிண்டே அவர்களை உணவு உற்பத்திக்கான மின் இணைப்புக்காகவும், சிறுபாசனத்திற்காகவும் 6 கோடி ரூபாய வேண்டுமென்று நாம் கேட்டபொழுது மத்திய அரசு உதவி செய்யும் என்று சொன்னுர்கள். இன்னும் வந்து சேரவில்லை. அதற்குப் பிறகும் முதலமைச்சர் அவர்கள் மாநாட்டிலே அறிஞர் அண்ணு அவர்கள் இதை வற்புறுத்தி இந்த தொகையை அவர்கள் கொடுப்பார்களாளுல் தமிழ்நாடு உணவுத்துறையில் தன்னிறைவு பெறுவதோடு மட்டுமல்ல, அண்டை மாநிலங்களுக்கும் உதவ முடியும் என்று கூறினுர்கள். அதன்பிறகு தஞ்சைக்கு வந்திருந்த உணவுத் துறையமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் சென்னைக்கு அரிசியை அனுப்பிய விழாவிலே கலந்துகொண்டபொழுது இதைப்பற்றி எடுத்துச்சொல்லப்பட்ட நேரத்திலே அதை அனுதாபத்தோடு கவனிக்கிறேன் என்று சொன்னுர்கள். நீங்கள் கேட்கிற 20 கோடி ரூபாய் இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது கொடுக்கிறேன் என்று சொன்னுர்கள். வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் இங்கே வருகின்ற பொழுதெல்லாம் இதைப்பற்றி நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிருேம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தஞ்சாவூரில் குறுவையை 3 லட்சம் என்றும் சம்பாவை 6 லட்சம் என்றும் இருபோகமாகக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி அணைப் பகுதியிலே இந்தத் திட்டத்தை எப்படி மேற்கொள்ளமுடியும் என்பதைப் பற்றியெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.